

ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல் இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி வீரப்பன் சத்திரம் பகுதி வார்டு 15ல் காவிரி கரையில் கழக அரசின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி வீடு வீடாகச் சென்று உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

பொது வாழ்வில் நேர்மை – உழவர்கள் மீது பெரும் அக்கறை கொண்டவர்:

# ஓமந்தூரார் படைத்த சாதனைகள் ஏராளம்!

## பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, பிப். 3 -

சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சருமான ஓமந்தூரார் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தலைசிறந்த காந்தியவாதியும் விடுதலை பெற்ற இந்தியாவில் சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சருமான ஓமந்தூரார் அவர்களின் பிறந்தநாள் இன்று.**

**ஆலய பிரவேசச் சட்டம், ஆதி திராவிடர் நலனுக்கெனத் தனித்துறை, ஜமீன்தார் ஒழிப்புச் சட்டம், இனாம் ஒழிப்புச் சட்டம், தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், இந்து சமய அறநிலையச் சட்டம் எனக் குறுகிய காலத்தில் அவர் படைத்த சாதனைகள் ஏராளம்.**

**பொதுவாழ்வில் நேர்மை, உழவர்கள் மீது பெரும் அக்கறை என வாழ்ந்த அவருக்கு என் புகழஞ்சலிகள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தஞ்சை வடக்கு மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா அவர்களின் 56ஆம் ஆண்டு நினைவு நாள்!

## மாவட்டக் கழகச்செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை!



தஞ்சாவூர், பிப். 3 -

பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு தினத்தை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் அண்ணா திருவுருவசிலை மற்றும் கிளைக் கழகங்களில் திருவுருவ படத்திற்கும் மாலை அணிவித்து மரியாதை செய்திட மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளையொட்டி 03.02.2025 இன்று திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக்கழ கங்களில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிற விதமாக அவருடைய சிலை இருக்கின்ற இடத்தில் சிலைக்கும், மற்ற இடங்களில் அவருடைய திருவருவ படத்திற்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அந்தந்த பகுதிகளில் உள்ள முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில்

# பேரறிஞர் அண்ணா நினைவு நாள் அமைதி ஊர்வலம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிக்கை!



தருமபுரி, பிப். 3 -

தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிக்கை வருமாறு:

அறிவுலக மேதை தென்னாட்டுகாந்தி, பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தை தோற்றுவித்து தமிழ் சமுதாய மக்களின் நலனுக்காக அயராது பாடுப்பட்டவர்,

தமிழகத்தில் இருமொழிக் கொள்கை, சென்னை மாகாணம் என்பது தமிழ்நாடு என பெயர் மாற்றம் சுயமரியாதை திருமணம் என ஆட்சி பொறுப்பேற்றதும் அனைத்தையும் சட்டமாக்கி மாற்றங்களை உருவாக்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக அரசியல் வரலாற்றில் கழகத்திற்கென தனிப்பாதையை உருவாக்கி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை நமக்கு தந்து அரசியல் பயணத்தில் வெற்றி கண்டவர் அண்ணா அவர்கள். இவ்வளவு சிறப்புகளையும், ஆற்றளையும் கொண்ட அண்ணா அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் இன்று பிப்ரவரி 3 ஆம் நாள் காலை 9.00 மணி அளவில் தருமபுரி ராஜகோபால் கவுண்டர் பூங்கா அருகில் இருந்து அமைதி ஊர்வலமாக சென்று நான்கு ரோடு அருகில் உள்ள அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

அதுசமயம் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி, ஊராட்சி, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மன்னார்குடி தேசிய மேல்நிலைப் பள்ளியில் 125 வது ஆண்டு விழாவை முன்னிட்டு தமிழ் நாடு அரசின் தொழில் முதலீடு மற்றும் ஊக்குவிப்பு துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்று சிறப்புரையாற்றினார். மாவட்ட ஊராட்சி பெருந்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, மன்னை நகர மன்ற தலைவர் மன்னை சோழராஜன், நகரக் கழகத்தினுடைய செயலாளர் வீரா கணேசன், மாவட்ட அவைத் தலைவர் க தனராஜ் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள், பள்ளி தலைமை ஆசிரியர் உள்ளிட்ட இருபால் ஆசிரியர் பெருமக்கள் சிறப்பு விருந்தினர்கள் நிகழ்வில் பங்கேற்றனர்



அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், அரியலூர் மாவட்ட அளவிலான அரசுப்பள்ளிகளின் நூற்றாண்டு திருவிழாவினை தொடங்கி வைக்கும் வண்ணம் அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழா தொடக்க நிகழ்ச்சியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சுடர் ஏற்றி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா . ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

முதல்வரின் நல்லாட்சிக்கு களங்கம் கற்பிக்க எடப்பாடி பழனிசாமி முயற்சி!

# ஈ.சி.ஆர். சாலையில் பெண்களை மிரட்டியவர்கள் அ.தி.மு.க.வினரே!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!



சென்னை, பிப். 3 -

ஈ.சி.ஆர். சாலையில் பெண்களை வழிமறித்து மிரட்டியர்வகள் அ.தி.மு.க.வினரே எனவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடக்கும் நல்லாட்சிக்கு வேண்டுமென்றே களங்கம் கற்பிக்கும் வகையில் பொய்யான குற்றச்சாட்டுகளை எடப்பாடி பழனிச்சாமி முன்வைக்கின்றார் என சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஆர்.எஸ்.பாரதி அளித்த பேட்டி வருமாறு :-

தமிழ்நாட்டில் எந்த ஒரு குற்றச் சம்பவம் நடைபெற்றாலும் அதைத் திராவிட முன்னேற்ற கழகத்தோடு தொடர்புபடுத்த வேண்டும் என்ற தீய உள்நோக்கத்தோடு எடப்பாடி பழனிச்சாமி தொடர்ந்து முயன்று வருகிறார். இது இன்று வெட்டவெளிச்சமாக வெளியே வந்துவிட்டது. ஆனால், அவர் குற்றம் சாட்டிய பல விசயங்களில் அதிமுகவினரே தொடர்பு கொண்டுள்ளனர்.

ECR சாலையில் பெண்கள் பயணித்த காரை சிலர் வழிமறித்த விவகாரத்தில் கைது செய்யப்பட்ட சந்துரு அதிமுகவை சார்ந்தவர். கைது செய்யபட்டவர் பயணித்த கார் நிலகிரி மாவட்ட அ.தி.மு.க. செயலாளருடைய சகோதரர் மகனுக்குச் சொந்தமானது.

**பாலியல் குற்றச்சாட்டில் கைதான அ.தி.மு.க.வினர்!**

அண்ணாநகர் சிறுமி வழக்கில் கைது செய்யப்பட்டவர் அதிமுகவை சார்ந்த வட்டசெயலாளர் சுதாகர். திருப்பத்தூர் மாவட்ட மருத்துவ மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்தவர் அதிமுகவை சார்ந்தவர். ராமேஸ்வரத்தில் பெண்கள் உடைமாற்றும் அறையில் கேமரா வைத்தவர் அதிமுக பிரமுகர். படப்பை பகுதியைச் சார்ந்த குன்றத்தூர் ஒன்றிய அதிமுக எம்.ஜி.ஆர். மன்ற இணைச்செயலாளர் பொன்னம்பலம் வீட்டில் வடைக்கு இருந்த பெண்களுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் விருதுநகர் நரிக்குடி மேற்கு ஒன்றிய அதிமுக செயலாளர் சந்திரன் தலைமையிலான கும்பல் ஆயுதங்களுடன் சென்று, கே.சி.பிரபாத் என்பவரையும், அவரது குடும்பத்தினரையும் வீடு புகுந்து தாக்கி, ரவுடித்தனம் செய்தனர்.

**நில மோசடியில் கைதான அ.தி.மு.க. பிரமுகர்!**

கடந்த மாதம் நெல்லை, ராதாபுரத்தில் சிபு ஆண்டனி என்ற ரியல் எஸ்டேட் அதிபரை தாக்கி, அவருக்கு சொந்தமான 60 சென்ட் நிலத்தை எழுதி வாங்கி அபகரிக்க முயன்ற முடவன் குளத்தைச் சேர்ந்த அதிமுக பிரமுகர் சுப்பிரமணி கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம், காஞ்சீபுரம் மாவட்டத்தில் ஓய்வுபெற்ற பெண் இன்ஸ்பெக்டரை ஹெல்மெட்டால் அடித்து கொலை செய்த வழக்கில் அதிமுக பிரமுகர் பிரபு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் சென்னை தியாகராய நகர் கண்ணம்மாபேட்டை பகுதியைச் சேர்ந்த அதிமுக ஜெயலலிதா பேரவை மாவட்ட துணைச் செயலாளர் திருமுருகன், சிஏ படிக்கும் மாணவியிடம் தன்னை திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால், முகத்தில் ஆசிட் வீசி கொலை செய்து விடுவேன் என மிரட்டியதால் கைது செய்யப்பட்டுள்ளார்.

**குற்றச்சாட்டுகளை மறைத்து அவதூறு பரப்பும் பழனிசாமி!**

இப்படி இன்னும் எத்தனையோ குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளோர் எல்லாம் அதிமுகவினரே. ஆனால் அதை எல்லாம் மறைத்து, மக்களை திசை திருப்பும் நோக்கில் வேண்டுமென்றே திமுக மீது அவதூறு பரப்பி வருகிறார் பழனிசாமி. அதிமுகவினர் செய்யும் தவறுகள் அனைத்தையும் திமுகவினர் மீது பழிபோட்டு வருகிறார் எடப்பாடி பழனிசாமி.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மக்கள் போற்றும் நல்லாட்சி நடைபெற்று வருகின்றது. இதன் காரணமாக திமுக எல்லா தேர்தல்களிலும் தொடர்ந்து வெற்றி பெற்று வருகின்றது. மக்களிடம் திமுக அரசாங்கம் பெற்றுள்ள நற்பெயரைக் குலைப்பதற்கு, திட்டமிட்ட வகையில் அதிமுக முயற்சி செய்து வருகின்றது என்பதையே ECR சாலையில் பெண்கள் பயணித்த காரை வழிமறித்த விவகாரம் காட்டுகின்றது. ஆகவே, இந்த விவகாரத்தில் முழுமையான புலன் விசாரணையை விரைந்து மேற்கொண்டு, குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டவர்களை வெளிப்படுத்த வேண்டும் என்று காவல்துறையைக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பேரறிஞர் அண்ணா 56-வது நினைவு நாள்:

# விழுப்புரம் தெற்கில் அமைதிப் பேரணி - கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், பிப். 3 -

இதுகுறித்து விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன். கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கழகத்தின் நிறுவனர், அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட தி.மு.க. சார்பில் , இ (3.02.2025 - திங்கட்கிழமை ) காலை 8.30 மணிக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் , வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில், மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி முன்னிலையில் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் இருந்து அமைதி ஊர்வலமாக சென்று கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்படுகிறது.

நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் , சார்பு அணிகளின் நிர்வாகிகள் , உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்கள் திரளாக கலந்துகொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பொன்.கௌதம சிகாமணி கேட்டுக் கொண்டுள்ளார்.



அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில். அரியலூர் மாவட்ட அளவிலான அரசுப்பள்ளிகளின் நூற்றாண்டு திருவிழாவினை தொடங்கி வைக்கும் வண்ணம் அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழா தொடக்க நிகழ்ச்சியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சுடர் ஏற்றி தொடங்கி வைத்து முன்னாள் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களுக்கு பொன்னாடை போற்றி, கேடயங்களை வழங்கி சிறப்பித்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.